1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

R.C.O.P.No. 50/2016

23.10.2025 ம.சா.2 திரு.முத்துராஜ்

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தபசில் சொத்தை பார்வையிடுதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து தபசில் இடத்தை பார்வையிடுவதற்காக தபால் வந்தது என்றால் சரிதான். மாத வாடகையை நிர்ணயம் செய்வதற்காக குறிப்பிடப்பட்டிருந்தது. எனக்கு மதிப்பீடு செய்வதற்கும் இயற்கை அமைப்புகளை பார்வையிடுதற்கும் மட்டுமே அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் மாத வாடகையை நிர்ணயம் செய்வதற்காக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வந்த அழைப்பாணையை எந்த அறிக்கையுடனும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் அளவீடு செய்ததற்கான எந்த விதமான பிளானையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த அறிக்கையில் எதிர்மனுதாரர் வெங்கடேஸ்வரன் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு கொடுத்த தபாலில் வெங்கடேஸ்வரன் என்று தான் இருந்தது. நான் இந்த இடத்தை பார்வையிட செல்வதற்கு முன்பு மேற்படி இடம் சம்மந்தப்பட்ட ஆவணங்களான பில்டிங் பிளான், Tax Receipt போன்ற ஆவணங்களை ஆணையர் என்னிடம் கொடுத்தார். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் மார்க்கெட் மதிப்பு எதனை வைத்து நிர்ணயம் செய்தேன் என்றால் Guide line மதிப்பு வைத்து நிர்ணயம் செய்தேன். ஏப்ரல் மாதம் தாக்கல் செய்த அறிக்கைக்கு எவ்வாறு செப்டம்பர் மாதம் உள்ள Guide line குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது அரசாங்கத்தில் இருந்து கொடுப்பதாகும்.

3. மனுதாரர்களின் ஆவணங்களை வைத்து பொய்யாக அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிடத்தின் உள்ள மற்ற

வாடகைதாரர்களிடம் மாத வாடகை எவ்வளவு என்று விசாரித்தேனா என்றால் இல்லை. என்னுடைய அறிக்கையில் கட்டிட வரைபடம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் எனது அறிக்கையானது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் ஒரு கதவு எண் தான் உள்ளது. தபசில் சொத்தில் நான்கு மால் விஸ்திரணம் பற்றி எதுவும் குறிப்பிடபடவில்லை.

4, தபசில் சொத்தில் உள்ள இயற்கை அமைப்புகளை பார்வையிட குறிப்பிட்டுள்ளதால் மேற்படி இடத்தின் மாற்றங்களை எதுவும் நான் பார்வையிடவில்லை. எனது அறிக்கையின் படி தபசில் சொத்தின் வாசலானது கிழக்கு மற்றும் வடக்கு பக்கம் உள்ளது. மேற்படி இரண்டு வாசலுக்கும் தனித்தனி கதவு எண் இருந்தும் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. Schedule of Rate படிதான் நான் கட்டிடத்தை நிர்ணயம் செய்தேன். அதன்படி சிமெண்ட், மண், இரும்பு, போக்குவரத்து மற்றும் வேலையாட்கள் கூலி சேர்த்து தான் Schedule of Rate நிர்ணயம் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

5. என்னுடைய கட்டிட மதிப்பீடும் நில மதிப்பீடும் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டில் தபசில் சொத்தை பார்வையிட்டு 2023ம் வருடம் பொய்யாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையானது எந்தவிதமான அடிப்படை ஆவணங்கள் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மார்க்கெட் மதிப்பை காட்டுவதற்கு எந்தவிதமான ஆவணங்களும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Schedule of Rate நிர்ணயம் செய்தவதற்கான ஆவணங்களை எனது அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கொடுத்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதை மீறி நான் மாத வாடகையை நிர்ணயம் செய்தது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இயற்கை அமைப்பு மற்றும் வரைபடம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள இந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது Guild line valueல்

திருவனந்தபுரம் ரோடு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி திருவணந்தபுரம் ரோடானது வண்ணாரப்பேட்டையில் இருந்து பாளை பேருந்து நிலையம் வரை 2.5 கிலோ மீட்டர் தூரம் வரை இருக்கும்.